2nd December 1970]

APPENDIX II

[*Vide* answer to Starred Question No. 37]

(அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையின் நிர்வாகத்தைச் சீரமைத்துத் திறன் மிக்கதாய்ச் செய்யும் நோக்குடன் அரசு இம் மாநிலம் முழுவதும், கீழ்க்காணும் நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப் பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

1. கன்னியாகுமரி—மதுரை வட்டாரம் :

இவ்வட்டாரம் நாகர்கோயிலில் தலைமையிடத்துடன் கன்னியா குமரி, திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களைக் கொண்டிருக் கும்.

2. திருச்சிராப்பள்ளி வட்டாரம் :

இவ்வட்டாரம், திருச்சிராப்பள்ளியில் தலைமையிடத்துடன் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், தென் ஆற்காடு மாவட்டங்களைக் கொண்டிருக்கும்.

3. சென்னை வட்டாரம் :

இவ்வட்டாரம் சென்னையில் தலைமையிடத்துடன் சென்னை மா நகரம், செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களைக் கொண் டிருக்கும்.

4. சேலம் வட்டாரம் :

இவ்வட்டாரம் சேலத்தில் தலைமையிடத்துடன் சேலம், தரும புரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களைக் கொண் டிருக்கும்.

2. தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை சீரமைக்கப் பட்டது தொடர்பாக கீழ்க்காணும் பணியாளர் நியமனத்துக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது :—

1. கன்னியாகுமரி—மதுரை வட்டாரம் :

1. (முதுநிலைச் சம்பளப்படிக் கிரமத்தில்) ஐ.ஏ.எஸ். பதவித் தரத்தில் இணை இயக்குநர் பதவி ஒன்று.

2. ரூ. 350—25—650 சம்பளத்தில் உதவிப் பொறியாளர்கள் தரத்தில் பணிமனைக் கண்காணிப்பாளர்கள் பதவிகள் இரண்டு.

3. ரூ. 600—40—1,000 சம்பளத்தில் நிர்வாகப் பொறியாளர் தரத்தில் துணை இயக்குநர் பதவி ஒன்று.

[2nd December 1970

2\. சென்னை வட்டாரம் :

1\. ரூ. 850—50—1,100 சம்பளத்தில் மாதம் ரூ. 150 சிறப்புச் சம்பளமும் சேர்த்து மாவட்ட வருவாய் அதிகாரியின் தரத்தில் இணை இயக்குநர் பதவி ஒன்று.

2\. ரூ. 600—40—1,000 சம்பளத்தில் (இயந்திரப் பொறியியல்) நிர்வாகப் பொறியாளர் பதவி ஒன்று.

3\. திருச்சிராப்பள்ளி வட்டாரம் :

1\. ரூ. 850—50—1,100 சம்பளத்தில் மாவட்ட வருவாய் அதிகாரியின் தரத்தில் இணை இயக்குநர் பதவி ஒன்று.

2\. ரூ. 600—40—1,000 சம்பளத்தில் நிர்வாகப் பொறியாளர் தரத்தில் துணை இயக்குநர் பதவி ஒன்று.

4\. சேலம் வட்டாரம் :

1\. ரூ. 850—50—1,100 சம்பளத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி தரத்தில் இணை இயக்குநர் பதவி ஒன்று.

2\. ரூ. 600—40—1,000 சம்பளத்தில் நிர்வாகப் பொறியாளர் தரத்தில் துணை இயக்குநர் பதவி ஒன்று.

3\. ரூ. 350—25—650 சம்பளத்தில் இணை இயக்குநருக்கு அரசிதழ்ப் பதிவுபெற்ற நேர்முக உதவியாளர் பதவி ஒன்று.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS